மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் அதிகமாக விளையும் தர்பூசணியை பதப்படுத்தி சாறு பிழியும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 272, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

272—

சமுதாயக் கூடம்

•7403—திரு. ப. பொன்னம்பலம்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கூட்டம் கூட, கலந்துரையாட சமுதாயக் கூடம் கட்டித் தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சமூக நலத் துறையின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டம் கூட, கலந்துரையாட சமுதாயக்கூடம் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக தமிழகத்திலுள்ள அனைத்து கிராமப்புறங்களில் உள்ள அடித்தள மக்களின் வாழ்க்கைத்

2003 ஏப்ரல் 21]

தரத்தை உயர்த்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மறுபரிசீலனை செய்து சுய உதவிக் குழுக்களுக்கு எதிர் வரும் ஆண்டுகளிலாவது கட்டடம் கட்ட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மூலமாகத்தான் கட்டடம் கட்டித் தருகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 'எஸ்.ஜி.எஸ்.ஒய்.' திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் பயன்படுத்திக்கொள்கிற வகையில் பல்நோக்கு மையக் கட்டடம், ஒரு இலட்ச ரூபாய் மதிப்பில் சுய உதவிக் குழுக்கள் கூடிப்பேசுவதற்காகப் பல்வேறு ஊராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் கட்டுவதற்கான கேள்வியில், கேள்விக்கே இடமில்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். துணைக் கேள்விக்கு இடம் இருப்பதாகக் கருதித்தான் கேட்கிறேன். இங்கே, சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் பற்றிக் கேட்கிறபொழுது, நமது சட்டமன்ற உறுப்பினர்களே பல பேர்கள், குழுவாக, சுய உதவிக் குழுக்களுடைய உறுப்பினர்களைப் போன்று ஒரே நிறத்திலே சேலை அணிந்து, இங்கே நமது கூட்டத் தொடரிலே பங்கேற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த உணர்வை மதிக்கிற வகையிலாவது இந்தக் கேள்விக்கு நல்ல பதிலை நான் எதிர்பார்த்தேன். ஆகவே சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் கட்ட —— வேறு பணிகள் மூலமாக நடைபெறுவதாகக் கூறுகிறீர்கள். ஆனால் —— இதை தனித்த முயற்சியாக எடுத்து, அதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்து, அதற்கான வகையில் கட்டடம் கட்டினால்தான், அது பயனுள்ள வகையில் அமையும். இதைக்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி, மற்ற நிதி என்று அதில் ஒரு காரணத்தைக் காட்டி, ஒரு எண்ணிக்கையை உயர்த்திவிடுவதற்கான முயற்சியை

எடுக்காமல், தனித்த நிதியை ஒதுக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிக அதிகமான அளவிலே ஆர்வத்தோடு குழுக்களை அமைப்பதற்கு தீவிரமாக வந்து கொண்டிருக்கிறார்கள். அரசினுடைய பொது நிதியிலேயிருந்து, அத்தனை ஊராட்சிப் பகுதிகளிலேயும் அமைக்கப்பட்டிருக்கிற குழுக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தருவது என்று சொன்னால், இருக்கின்ற நிதி நிலை அதற்கு இடம் தராது என்கிற காரணத்தால், தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், சமீபத்தில்தான் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கூடிப் பேசுவதற்கும், கூட்டம் நடத்துவதற்கும் அந்தந்த கிராமங்களிலே இருக்கிற சத்துணவுக் கூடங்கள், ஊட்டச் சத்து மையங்கள் மற்றும் அந்தந்த கிராமத்திலே இருக்கிற இதர அரசு கட்டடங்களைப் பயன்படுத்தி, குழு உறுப்பினர்கள் கூடிப் பேசலாம் என்கிற உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையாக இட்டிருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாநிலத்திலே அதிக எண்ணிக்கையில் அதிகப்படியான குழுக்கள் இப்போது உருவாகி வருகின்றன. இதில் இலட்சக்கணக்கில் மகளிர் அங்கம் வகிக்கிறார்கள். இந்தக் குழுக்கள் அந்தந்த வட்டங்களில் யாருடைய கட்டுப்பாட்டில், யாருடைய தலைமையில் இவை செயல்படுகின்றன? அமைக்கப்பட்டிருக்கக்கூடிய சமுதாயக் கூடங்களும், அமைக்கப்போகிற சமுதாயக் கூடங்களும் யாருடைய கண்காணிப்பில், பராமரிப்பில் செயல்படும்? இவற்றை முறைப்படுத்துவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தனிப்பட்ட யாருடைய கட்டுப்பாட்டின் கீழும் இயங்கவில்லை. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கட்டுப்பாட்டிலேதான் இந்த சுய உதவிக்

2003 ஏப்ரல் 21]

குழுக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவும் அவர்களுக்குத் துணைபுரிவதற்காகவும்தான் அந்தந்தப் பகுதியிலே இருக்கிற தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகிறார்களே தவிர, தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டிலே சுய உதவிக் குழுக்கள் இயங்கவில்லை. அதேபோல சத்துணவுக் கூடங்கள், ஊட்டச் சத்து மையங்களிலே கூட்டம் நடத்துவதற்கு, பள்ளிக் குழந்தைகள் படித்து முடித்துவிட்டுச் சென்றதற்குப் பிறகுதான் அந்த மையங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு அந்தக் குழு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. கூட்டம் முடிந்ததற்குப் பிறகு சத்துணவுப் பொறுப்பாளர்களிடத்திலோ அல்லது ஊட்டச் சத்து மையங்களின் பொறுப்பாளர்களின் கையிலோ அந்தக் கட்டடத்தின் பொறுப்பு வந்துவிடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 273, திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

273—

கண்காணிப்புக் குழு

***10072—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களைக் கண்காணிக்க பொதுமக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சத்துணவு மையங்களைக் கண்காணிக்க பொதுமக்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில், பொதுமக்கள் அடங்கிய குழு நியமிக்கப்படவில்லை